## அரசியல் ஏமாற்றுப் பேர்வழி கோயபல்ஸ் போல் காட்சியளிக்கிறார் எடப்பாடி!

# ஏழை எளிய மக்களுக்குச் சேவையாற்றும் மருத்துவத் துறை மீது காழ்ப்பு அரசியல் நடத்துவதா?

### டெங்கு குறித்து எடப்பாடி பழனிச்சாமியின் உண்மைக்கு மாறான அறிக்கையை மறுத்து - ஆதாரங்களுடன் அமைச்சர் மா.சுப்பிரமணியன் விளக்கம்!

சென்னை, நவ. 28-

**ஒரு பொய்யை உணர்வுபூர்வமாக எடுத்துரைத்து அதை உண்மை என நம்ப வைப்பதில் உலகத்தில்கோயபல்ஸை மிஞ்சிய ஆள் இல்லை என்றும் - அரசியலில் ஏமாற்றுப்பேர்வழிகளின் தந்தை கோயபல்ஸ் போல் காட்சியளிப்பவர் எடப்பாடி பழனிச்சாமி என்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன் அறிக்கை விடுத்துள்ளார்.**

**அவரது அறிக்கை வருமாறு-**

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி தவழ்ந்து முதலமைச்சர் பொறுப்புக்கு வந்தவர். அதனால் அவருடைய பேச்சு மற்றும் அறிக்கைஅனைத்தும் அடிப்படையில்லாமல் தவழும் குழந்தை போல் குழந்தைதனமாக உள்ளது என்பது நாடறியும். ஒன்றல்ல இரண்டல்ல பலமுறை அவருக்கு நான் ஆதாரங்களுடன் பதில் அளித்து இருக்கிறேன், இன்னமும்பதிலளிப்பேன்.

எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் இன்று டெங்கு பற்றிய அறிக்கையில் “டெங்கு போன்ற விஷக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டு அரசு மருத்துவமனைகளுக்கு படையெடுத்து வருவதாகசெய்திகள் வருகின்றன“ என்று குற்றம்சாட்டுவதில் கூட ஆருடம் கூறுவதைப் போல் குழப்பநிலையில்உள்ளார். அடுத்ததாக ஜெயலலிதா ஆட்சியில் நடத்தியதைப்போல முகாம்கள் நடத்த வேண்டும் என்கிறார்எடப்பாடி பழனிசாமி. மருத்துவத்துறை வரலாற்றிலேயே இல்லாத வகையில் 29.10. 2023 தொடங்கி 30.12.2023 வரை மழைக்கால சிறப்பு மருத்துவமுகாம்கள் 10 அறிவிக்கப்பட்டு வாரத்திற்கு 1000 முகாம்கள்என்று இலக்கு அறிவிக்கப்பட்டதில், இலக்கை மிஞ்சிய சாதனையாக இது வரை நடைபெற்ற 5 வார மழைக்காலசிறப்பு மருத்துவ முகாம்களில் 5000 முகாம் நடைபெற்று இருக்க வேண்டும். ஆனால் 10,576 முகாம்கள் நடைபெற்று உள்ளது. அதில் 5,21,853 பேர் பங்கேற்று பயன் பெற்றுள்ளனர். இது தெரியாமல் புரியாமல் யாரோ எழுதிக் கொடுத்ததை வருகிற நாடாளுமன்ற தேர்தலை மனதில் கொண்டு மருத்துவத்துறையில் அரசியல் செய்ய பார்க்கிறார். இதில் என்ன வேடிக்கை என்றால்ஜெயலலிதா ஆட்சியில் 2012ஆம் ஆண்டு உச்சக்கட்ட டெங்கு பாதிப்பு 13,204 பேர் பாதிக்கப்பட்டு 66 பேர் உயிரிழந்துள்ளனர். அதனைத்தொடர்ந்து அதிகமாக டெங்கு பாதிப்பு 2017 ஆம் ஆண்டுதவழ்ந்து வந்து ஆட்சியைப் பிடித்த எடப்பாடி ஆட்சிக்காலத்தில் பாதிப்புகள் 23,294, இறப்பு 65.



முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மருத்துவத்துறை ஜனவரி 2023 முதல் இதுவரை 3,57,612 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு ஜனவரி முதல் இதுவரை 7,133 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் மருத்துவமனை சிகிச்சையில் உள்ளோர்எண்ணிக்கை 537 பேர், 10 பேர் இறந்துள்ளனர் என்று நாள்தோறும் என்னுடைய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்து வருகிறேன்.

திராவிட மாடல் அரசின் நாயகர்; முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி உள்ளதை உள்ளபடி அரசியல் செய்யவோ அரசைநடத்தவோ தெரிந்தவர்கள் நாங்கள் குனியவோ, குழையவோ, தவழவோ தெரியாதவர்கள் பழகாதவர்கள் நாங்கள்.

மருத்துவத்துறை, உள்ளாட்சித்துறை இணைந்து தேங்கி உள்ள தண்ணீரை அகற்றி டெங்கு பரவலை தடுக்க வேண்டும் என்கிறார் எடப்பாடி. 2021 திமுக ஆட்சி அமைந்த பிறகு பெருநகர சென்னை மாநகராட்சியில் மட்டும் 862.56 கிமீ ரூ.2,899.09 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளனமற்றும் 369.60 கி.மீ நீளத்திற்கு ரூ.1894.59 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் பணிகள்நடைபெற்று வருகிறது. இந்நிலையில் தொடர் மழை பெய்து ஏரி, குளம் நிரம்புகிறதே தவிர சாலையில்ஒரு சொட்டு நீர் கூட தேங்குவதில்லை.

இதை அறியாமல் எடப்பாடி அவர்கள் ஒரு பொய்யை உணர்வுபூர்வமாக எடுத்துரைத்து அதை உண்மை என நம்பவைப்பதில் உலகத்தில் கோயபல்ஸ் மிஞ்சிய ஆள் இல்லை என்பார்கள். அதைப்போல ஏமாற்றுப்பேர் வழிகளின் தந்தை கோயபல்ஸ் போல் காட்சித்தருகிறார். அவர் நிலையைமாற்றி கொள்ள வேண்டும். ஓட்டு அரசியலுக்காக பல இலட்சம் ஏழை, எளிய மக்கள் பயன்படுத்தும் மருத்துவமனைகள் மீதும், சேவைபுரியும் மருத்துவத்துறை மீதும் காழ்ப்புணர்ச்சி அரசியலைஇனிவரும் காலங்களில் தவிர்க்க வேண்டும் என்று மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் அறிக்கையில் தெரிவித்தார்கள்.



கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை திருவல்லிக்கேணி கஸ்தூரிபாய் தாய் சேய் நல மருத்துவமனையில் நேற்று பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கும் நிகழ்ச்சியை மண்டல குழு தலைவர் மதன் மோகன் ஏற்பாட்டில் அமைச்சர் மா. சுப்பிரமணியன், தயாநிதி மாறன் எம்.பி., ஆகியோர் குழந்தைகளுக்கு தங்க மோதிரங்களை அணிவித்தனர்.

### அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில் இன்று மறைமலைநகரில் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன்

# 5 ஆயிரம் ஏழைகளுக்கு இலவச மனைப் பட்டாக்கள் வழங்குகிறார்!

காஞ்சிபுரம், நவ.28-

கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, செங்கல்பட்டு மாவட்ட வருவாய்த் துறையின் சார்பில் மறைமலைநகரில் இன்று அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில் நடைபெறும் பட்டா வழங்கும் விழாவில் வருவாய்த்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர் ராமச்சந்திரன் 5 ஆயிரம் ஏழைகளுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களை வழங்குகிறார்.

கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு செங்கல்பட்டு மாவட்ட வருவாய்த் துறையின் சார்பில் மறைமலைநகரில் மாபெரும் பட்டா வழங்கும் விழா இன்று 28.11.2023 மாலை 10.00 மணியளவில் மறைமலை நகரில் உள்ள நகராட்சி மைதானத்தில் குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில் நடைபெறுகிறது.

தொடக்கத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர.ராகுல் நாத் அனைவரையும் வரவேற்று பேசுகிறார். தமிழ்நாடு அரசின் நில நிர்வாக ஆணையர் க.நாகராஜன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை செயலாளர் வெ. ராஜாராமன், நில அளவை துறை இயக்குநர் ப. மதுசூதணன் ரெட்டி ஆகியோர் திட்ட விளக்க உரையாற்றுகின்றனர்.

இவ்விழாவில் வருவாய் மற்றும் விழாவில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர் ராமச்சந்திரன் கலந்து கொண்டு 5 ஆயிரம் ஏழைகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்களை வ ழ ங் கி சிறப்புரையாற்றுகிறார்.

இவ்விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். பாலு, க.செல்வம், தமிழச்சி தங்கப்பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். ஆர்.ராஜா, இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதணன், அரவிந்த் ரமேஷ், எஸ். எஸ். பாலாஜி, பனையூர் மு.பாபு, தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் செம்பருத்தி துர்கேஷ், துணைத் தலைவர் காயத்திரி அன்புச் செழியன், மறைமலை நகர் நகராட்சி தலைவர் ஜெ.சண்முகம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றித் தலைவர் உதயா கருணாகரன், ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவர் வி.எஸ். ஆராமுதன், மறைமலைநகர் நகராட்சி துணைத் தலைவர் சித்ரா கமலகண்ணன், 8வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் கஸ்தூரி தசரதன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இவ்விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் பி. சுபாந்நிதினி நன்றியுரை ஆற்றுகிறார்.

இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில், மறைமலைநகர் நகர் மன்ற தலைவர் வெ. சண்முகம், நகர செயலாளர்கள் என். நரேந்திரன், எம்.கே. டி.கார்த்திக், ஒன்றிய செயலாளர்கள் வி.எஸ். ஆராமுதன், கி. சந்தானம் ஆகியோர் முன்னின்று செய்து வருகின்றனர்.



சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் –அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, சைதை கிழக்கு பகுதிக் கழக ஆலோசனை கூட்டத்தில் தொகுதி பார்வையாளர் கோ.வி. லெனின், பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் ஆகியோர் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்களை விளக்கி பேசினார் கூட்டத்தில் மாவட்ட அவைத்தலைவர் எஸ்.குணசேகரன் பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை சம்பத் மின்னல் கந்தப்பன் மாமன்ற உறுப்பினர் தா.மோகன்குமார், கோட்டூர் எஸ். பிரகாஷ், மணிகண்டன், நாடிமுத்து, பகுதி நிர்வாகிகள் இ.முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு.ஆரோக்கியம், மு.பாக்கியலட்சுமி, வட்ட செயலாளர்கள் நா.ராதாகிருஷ்ணன், எல்.ஆரோக்கியராஜ், க.மணி, கோட்டூர் கோ.சண்முகம், எஸ்.பாட்சா, எஸ்.ஆர். செந்தில் ,மாவட்ட பிரதிநிதிகள் டி.வி.நரசிம்மன், ச.சேகர், எஸ்.ராதாகிருஷ்ணன் எஸ்.ஜே.சலாம் க.உமாபதி, ஜி.செல்வராஜ், வே.முருகன், இரா.சுதாபிரியன், கோட்டூர் ந.பாபு, மகேஷ்லாரன்ஸ், கே.எம்.எஸ்.கணேசன், ஜி.யோவான், வே.ரமேஷ்குமார் மற்றும் மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், பாக முகவர்கள் கலந்து கொண்டனர்

### 2023 - 24 ஆம் ஆண்டுக்கான

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் - பொதுக் கணக்குக் குழுக் கூட்டம்!

### கு.செல்வப்பெருந்தகை தலைமையில் நடைபெற்றது! மேயர் ஆர். பிரியா - துணை மேயர் மு.மகேஷ் குமார் பங்கேற்பு!

சென்னை, நவ. 28-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2023-24ஆம் ஆண்டு பொதுக் கணக்குக் குழுக் கூட்டம் பொதுக் கணக்குக் குழுத் தலைவர் கு.செல்வ பெருந்தகை தலைமையில் நேற்று (27.11.2023) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் தலைமையிலான குழுவினர் பெருநகர சென்னை மாநகராட்சி, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, தீயணைப்புத்துறைகளின் தணிக்கை பத்திகள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

முன்னதாக, பெருநகர சென்னை மாநகராட்சி, அண்ணாநகர் மண்டலத்திற்குட்பட்ட சேத்துப்பட்டில் இயங்கி வரும் 100 டன் திறன் கொண்ட உயிரி எரிவாயு தயாரிக்கும் நிலையத்தினை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பொதுக் கணக்குக் குழுவினர் நேற்றுறு (27.11.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அதன் செயல்பாடுகள் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தனர்.

பின்னர், வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட பிரகாசம் சாலை மற்றும் எஸ்பிளனேடு சாலையில் மழைநீர்த்தேக்கம் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் ரூ.5.97 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மழைநீர் வடிகால் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை ரிப்பன் கட்டடத்தில் உள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து கண்காணிக்கப்படுவதைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். மேலும் ரிப்பன் கட்டட வளாகத்தில் கட்டப்பட்டு வரும் பசுமைக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகளையும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பொதுக் கணக்குக் குழுவினர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

இக்கூட்டத்தில், மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், குழுவின் உறுப்பினர்கள்/சட்டமன்ற உறுப்பினர்கள் அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, ஈ.ஆர்.ஈஸ்வரன், க.கார்த்திகேயன், ஆ. கிருஷ்ணசாமி, துரை சந்திரசேகரன், டாக்டர் சி. சரஸ்வதி, எஸ். சேகர், எஸ்.எஸ். பாலாஜி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலாளர் முனைவர் கி.சீனிவாசன், இணைச் செயலாளர் திருமதி பி.தேன்மொழி, சார்புச் செயலாளர் ஜெ.பாலசீனிவாசன், நகராட்சி நிருவாகத் துறை இயக்குநர் சு.சிவராசு, கூடுதல் ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர். லலிதா, இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், துணை ஆணையாளர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், வட்டார துணை ஆணையாளர்கள் எம். பி.அமித், (தெற்கு), கே.ஜெ.பிரவீன் குமார், (மத்தியம்), கட்டா ரவி தேஜா, (வடக்கு), நிலைக்குழுத் தலைவர்கள் த. விசுவநாதன் (கல்வி), டாக்டர் கோ. சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), மண்டலக்குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், தலைமைப் பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் அரசு வழக்கறிஞர்

# எம்.கே.இதயத்துல்லா மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, நவ.28-

1996-2001 கழக ஆட்சிக் காலத்தில் சென்னை உயர்நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞராகப் பொறுப்பு வகித்தவர், கடந்த 52 வருடங்களாக வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டு உயர்நீதிமன்ற மூத்த வழக்கறிஞராக விளங்கியவர், இந்தியாவில் உள்ள பல்வேறு நீதிமன்றங்களிலும் ஏராளமான வழக்குகளில் ஆஜராகி வாதிட்டு, அத்துறையில் புகழோடு விளங்கியவர் எம்.கே.இதயத்துல்லா.



மேலும் இவர் - சென்னை மேற்கு மாவட்ட - கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் துணைத்தலைவராக உள்ள அப்சலின் தந்தையுமாவார்.

78 வயதான வழக்கறிஞர் எம்.கே.இதயத்துல்லா, நேற்று (27.11.2023) மாலை 4.00 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இவருக்கு பாத்திமா எனும் மனைவியும், அப்சல் தவிர்த்து பைசல் எனும் மகனும், அப்ரஸ் சுல்தானா எனும் மகளும் உள்ளார்கள்.

அன்னார் மறைவுற்ற செய்தியறிந்து ஏராளமான வழக்கறிஞர்களும், கழக முன்னோடிகளும் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அவரது இறுதிச்சடங்குகள் இன்று (28-11-2023 - செவ்வாய்க்கிழமை) இரவு 8.00 மணியளவில் - இராயப்பேட்டையில் உள்ள அம்ருன்னிசா பேகம் இஸ்லாமியர்கள் இடுகாட்டில் நடைபெறுகிறது.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சரும் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தாம்பரம் மாநகரம் மற்றும் பகுதி சார்பாக ஜி.எஸ்.டி ரோட்டில் கழக கொடியேற்றி, இனிப்பு வழங்கி, ஏழை எளிய மக்களுக்கு உணவு வழங்கியும் அதனை தொடர்ந்து குட்லைப் ஆதரவற்ற குழந்தைகள் இல்லத்தில் காலை உணவு மற்றும் இனிப்புகள் வழங்கியும் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, எம்,எல்,ஏ, மண்டல குழு தலைவர்கள் பகுதி கழக செயலாளர்கள் டி.காமராஜ், எஸ் இந்திரன் மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் (து) அமைப்பாளர்கள் மற்றும் கழகத் தோழர்கள் உடன் இருந்தனர்.

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்! ச.சங்கர் கணேஷ் எம்.சி. ஏற்பாட்டில்

# 151வது வார்டு அரசு பொதுமருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் அணிவிக்கிறார்! காரம்பாக்கம் கணபதி - ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா பங்கேற்பு!

சென்னை, நவ.28-

சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி தி.மு.க சார்பில் இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளரும், 151வது வார்டு மாமன்ற உறுப்பினருமான ச.சங்கர் கணேஷ் ஏற்பாட்டில் (இன்று 28.11. 2023, செவ்வாய்க்கிழமை) மாலை 5.00 மணியளவில், மதுரவாயல் தெற்கு பகுதி,151வது வார்டு, சின்னபோரூரில் அமைந்துள்ள அரசு நகர்புற பொது மருத்துவமனையில் 27.11.2023 அன்று பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணியும் நிகழ்ச்சியும், அதே மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ள அரசு தத்தெடுத்து நடத்துகின்ற பாதை அதர்வற்ற இல்லத்தில் வசிக்கின்ற குழந்தைகளுக்கு புத்தாடைகள் மற்றும் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியை மாவட்டச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன், காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் துவக்கி வைக்கிறார்கள்.

இந்நிகழ்வில் மதுரவாயல் வடக்குப் பகுதி கழக செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் எம்.சி, வில்லிவாக்கம் ஒன்றிய கழக செயலாளர் அயப்பாக்கம் அ.ம. துரைவீரமணி, தலைமை பொதுக்குழு உறுப்பினர் இராமாபுரம் வ.செல்வக்குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எம். விநாயகமூர்த்தி, செ. இரவி, ஆர்.கிருஷ்ணகுமார், ஜெ.பாண்டியன், கா.வீ. தியாகராஜன், கோட்டூர் பிரகாஷ், பகுதி கழக நிர்வாகிகள் பி.எம். செல்வராஜ், வே.மதியழகன், இரா.பால்பாண்டியன், திருமதி. பாரதி அண்ணாவேலன் எம்.சி, கே.ராஜு எம்.சி, மதுரவாயல் தெற்கு பகுதி மாமன்ற உறுப்பினர்கள் திருமதி. செல்வி ரமேஷ், திருமதி. ஹேமலதா கணபதி, திருமதி. சாந்தி இராமலிங்கம், வட்டக் கழக செயலாளர் அ.மோசஸ், எஸ்.ரமேஷ்ராஜ், டி.ரமேஷ், சி.சுந்தர், எஸ்.அப்பன் (எ) சத்தியமூர்த்தி, தி. சார்லஸ், ஆ.இராதா செல்வம், மாவட்ட பிரதிநிதிகள் வி. விஜயன், சேகர்,

151-வது வட்ட கழக நிர்வாகிகள் அவைத் தலைவர் செ. இராமையா, துணை செயலாளர்கள் ம.சிவா, கி.ஜி. முரளி, விமலா சேகர், பொருளாளர் வி.பன்னீர்செல்வம், வட்ட பிரதிநிதிகள் கோ.கண்ணதாசன், முரளி கிருஷ்ணன், கி.குமார், ப.சரவணன், மோ.’சுந்தர், இளைஞரணி பகுதி அமைப்பாளர் எம்.பி. நவராஜ், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வினோத், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள் டி.இராஜேஷ், இரா.பா. உதயகுமார், மு.மகேஷ்குமார், பிரசாந்த், எ.மதன்குமார், அன்பரசன், ஜெ. ஹேமசந்திரன், சரவணன், செந்தில்குமார், முரளி கிருஷ்ணன், ஜனார்தனன், சபரிராஜா, டி.மனீஷ் உள்ளிட்ட வட்ட, கிளை இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக செயல்வீரர்கள் மற்றும் தோழர்கள் கலந்து கொள்கின்றனர்.

வருகை புரிந்த அனைவருக்கும் ஏ.செந்தில் குமார் நன்றி கூறுகிறார்.


# தாயுமானார் முதல்வர் தடம் செல்லும் தகைமை வாழி! நீடூழி!



தந்தையர் கலைஞர் தம்வழித் - தந்தை
தாயுமானார் முதல்வர் தம்வழி!
முந்தையர் மரபுவழி முனைப்புடன் - எழுச்சி
முதிர்ச்சிப் பயிற்சியின் உச்சம்
சிந்தை மாசிலாத் திறம்அறம் - நடைமுறை
செயலாக்கம் காணும் வேகமுடன்
விந்தை உதயநிதி இஸ்டாலின் - கழக
வேர்காக்கும் இளைஞரணிக் கோவே!

கருவிலே திருவென்பார் கண்முன் - காணும்
காலங்களை வெல்லும் கதிரவனே!
வருமுன் காக்கும் வரலாற்று - நாயகனே
வரிப்புலிகள் பரம்பரை நிலைஒளியே!
திருநாடு தமிழ்நாடு செய்தவக் - கலைஞர்
செந்தமிழ் உருஉயிர்த் தி.மு.க.
பெருஇயக்கம் பீடுறவே வளர்க்கும் - தகைமைப்
பேறுதமிழ் நாடுநிதியே! வாழி! நீடூழி!

உடலோம்பும் உயிரோம்பும் உரிமைப் - பாதை
உயர்விளை யாட்டுதுறை அமைச்ச!
கடல்நன்னீ ராகியே தேவைக்குத் - தகவேதான்
கரைபுரண்டு வருமுயற்சிக் கற்பகமே!
திடமனத்தால் சாதிமத மோதலாம் - சனாதனம்
திருத்தியே சமத்துவம் ஆக்கம்செய்
அடலேறு முதல்வரின் அருமகனே - கலைஞர்
ஆருயிர்ப்பேரனே உதயநிதி இஸ்டாலினே
வாழி! வாழி! நீடூழியே!



-பெருங்கவிக்கோ
வா.மு.சேதுராமன்
(உலக அமைப்பாளர்,
பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்)